# உயர்திணை அஃறிணை

கனிமொழி.... என்ன செய்ற?

அப்பா..... நா.... இலக்கணம் படிக்கிறேன்.

இலக்கணம் படிக்கிறியா.....?

ஆமாம்!

சரி என்ன படிக்ற?

உயர்திணை அஃறிணை.

உயர்திணையும் அஃறிணையும் நம்ம நடைமுறை வாழ்க்கையிலேயே இருக்கே?

எப்படி?

இவர் யார்?

இவர் என் அம்மா

இது என்ன?

இது பூனை.

பெட்டியின் உள்ளே என்ன இருக்கிறது?

பெட்டியின் உள்ளே புத்தகம் இருக்கிறது.

பாட்டி என்ன செய்கிறார்?

பாட்டி சமையல் செய்கிறார்.

உன்னிடம் எத்தனை பொம்மை இருக்கிறது?

என்னிடம் ஆறு பொம்மைகள் இருக்கிறது.

உனக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்?

எனக்கு இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள்.

இப்போது புரிந்ததா?

புரியவில்லையே......

கேள்வியையும் பதிலையும் நினைவுபடுத்திப்பார்.

பாட்டி, அம்மா, நண்பர்கள் போன்றவர்களைக் கூறும் போது இவர், இருக்கிறார், என்றாய்! பூனை, பெட்டி, புத்தகம், பொம்மை போன்றவற்றை இது, இருக்கிறது, என்றாய் அல்லவா?

ஆமாம்!

அதுதான். மனிதர்கள் மட்டுமே உயர்திணை

பிற அனைத்தும் அஃறிணை

ஆனால்...... விலங்குகளுக்கும் உயிர் இருக்கிறதே?

சரிதான்!

ஆனால் விலங்குகளுக்கு உயிர் இருந்தாலும் அவைகளால் பேசவோ சிந்திக்கவோ முடியாது. அதனால் மனிதர்களைத் தவிர்த்த பிற அனைத்தும் அஃறிணை. இப்போது புரிந்ததா?...

நன்றாக புரிந்தது அப்பா!

**கவனத்தில் கொள்க :-**

உயர்திணையில் வினைச்சொல்லோடு அன், ஆன், அள், ஆள், அர், ஆர் போன்ற விகுதிகளைப் பயன்படுத்த வேண்டும்.

சான்று :- ராமு வந்தான், செல்வி வந்தாள், ஆசிரியர் வந்தார்.

இதனைப்போல அஃறிணை வினைச்சொல்லோடு அது என்ற விகுதியைப் பயன்படுத்த வேண்டும்.

சான்று :- பூனை வந்தது, ஆடு புல் மேய்ந்தது.